**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம், இராமநாதபுரம்**
**(கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்)**

**முன்னிலை: திரு. C. மோகன்ராம், M.A., B.L.,**
**விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் திங்கள்கிழமை**

**M.C.O.P. No.176/2024**
**(CNR No.TNRM 01 004072 2024)**

1. அருளாந்து, வயது சுமார் 63, த/பெ.ஞானபிரகாசம், கதவு எண்.1/102, பாத்திமா நகர், காரங்காடு, புதுப்பட்டினம், இராமநாதபுரம்.

2. சிறியபுஷ்பம், வயது சுமார் 55, க/பெ.அருளாந்து, கதவு எண்.1/102, பாத்திமா நகர், காரங்காடு, புதுப்பட்டினம், இராமநாதபுரம்.

3. அன்பரசி, வயது சுமார் 35, க/பெ.அந்தோணிராயப்பன், கதவு எண்.1/102, பாத்திமா நகர், காரங்காடு, புதுப்பட்டினம், இராமநாதபுரம்.

4. அருள் ரஞ்சிதா, வயது சுமார் 26, க/பெ. வின்செண்ட் பவுல், கதவு எண்.1/102, பாத்திமா நகர், காரங்காடு, புதுப்பட்டினம், இராமநாதபுரம்.

5. ஆரோக்கியதாஸ், வயது சுமார் 39, த/பெ. அருளாந்து, கதவு எண்.1/102, பாத்திமா நகர், காரங்காடு, புதுப்பட்டினம், இராமநாதபுரம்.

... மனுதாரர்கள்

/எதிர்/

கிளை மேலாளர் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், இராமநாதபுரம் பணிமனை, இராமநாதபுரம்.

... எதிர்மனுதாரர்

மனு தாக்கலான நாள் – 13.08.2024

மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் – 27.09.2024

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:43:37 +0530

இம்மனு 12.03.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாரதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.O.உஷாதேவி அவர்கள் முன்னிலையாகியும் இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்தும், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

29.01.2024ம் தேதி மாலை சுமார் 6.15 மணியளவில் ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்த இனிகோ என்பவரின் வாரிசுதாரர்கள் என்ற முறையில் மனுதாரர்கள் ரூ.50,00,000/- இழப்பீடு கோரி இம்மனு மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவுகள் 140, 164, 166 மற்றும் 171ன்படியும், உ/இ மோட்டார் வாகன இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)ன்படியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகையை பெறத்தக்கவர்களா என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதியாகும்.

3) மனுதாரர்கள் தங்களது வழக்கை நிரூபிக்க 1ம் மனுதாரரை ம.சா.1 ஆக விசாரித்து, அவர் மூலம் 7 ஆவணங்களை குறியீடு செய்துள்ளனர். விபத்தை நேரில் கண்ணுற்றதாக சொல்லப்படும் ஒரு சேசு என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எவ்வித சான்றாவணமும் குறியீடு செய்யவில்லை.

4) எதிர்மனுதாரர்கள் தரப்பில் விபத்து வாகனத்தின் ஓட்டுநரை எ.ம.சா.1 ஆக விசாரித்து அவர் மூலம் எவ்வித சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:43:44 +0530

**5) <u>விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்:</u>**

5.1. மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் அருளாந்து மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும்விதமாக தன்னை ம.சா.1 ஆக விசாரித்து 7 ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். 1ம் மனுதாரர் தனது சாட்சியத்தில் (நிரூபண வாக்குமூலத்தில்) தனது மகன் இனிகோ கடந்த 29.01.2024ம் தேதி TN 69 AY 1791 Passion Pro என்ற இருசக்கர வாகனத்தில் உப்பூர் – தொண்டி ECR ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இடதுபுறமாக காரங்காடு சுனாமி காலனி அருகில் மாலை 4.15 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான TN 63 N 1688 என்ற பேருந்தை தெற்கிலிருந்து வடக்குநோக்கி ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அவருக்கு முன்பு சென்று கொண்டிருந்த கதிர் அறுக்கும் வாகனத்தை முந்துவதற்காக வலதுபுறம் ஏறி வந்து ஒலி எழுப்பாமலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து இடதுபுற ஓரத்தில் எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த தனது மகனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் தனது மகன் இனிகோ கீழே விழுந்து கழுத்து, தலையில் ரத்தக்காயமும், வலது காலில் ரத்தக்காயமும், வலது கை, வலது மார்பு பகுதிகளில் எலும்பு உடைந்து காயங்கள் ஏற்பட்டது என்றும், சுனாமி காலனி அருகில் நின்ற செங்கோல் சேம்ராஜ் மற்றும் பெனிலன் ஆகியோர் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தனர் என்றும் பின்னர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதில் தனது மகன் சிகிச்சை பலனின்றி 30.01.2024 அன்று மதியம் 12.00 மணியளவில் இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது சாட்சியத்தில் விபத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநர் முருகேசன் என்பவர் மீது திருப்பாலைக்குடி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:43:50 +0530

5.2. திருப்பாலைக்குடி போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்துக்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் விபத்தில் இறந்துபோன இனிகோ ஓட்டிச் சென்ற TN 69 AY 1791 க்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பேருந்து மற்றும் இருசக்கர வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து விபத்தில் சம்பந்தப்பட்ட இரு வாகனங்களுக்கும் முன்பகுதியில் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே இருசக்கர வாகனமும் பேருந்தும் நேருக்குநேர் மோதியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

5.3. விபத்து எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான பேருந்தினால் ஏற்படவில்லை என எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. மாறாக, அரசு பேருந்து ஓட்டுனர் கவனமாகவும், சாலை விதிகளைப் பின்பற்றி பேருந்தை இயக்கி செல்லும்போது, பேருந்திற்கு எதிராக குறுக்குச்சாலையில் இருந்து விபத்தில் இறந்துபோன இருச்சக்கர வாகனத்தில் வந்து 1ம் மனுதாரர் மகன் பேருந்தின் மீது மோதிவிட்டதாகவும் அவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றும் இறந்த 1ம் மனுதாரரின் மகன் குறுக்கு சாலையிலிருந்து மெயின் ரோட்டிற்கு வரும்போது கவனமாக வாகனத்தை ஓட்டி வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றும் விபத்திற்கு இறந்த நபரே காரணம் என்ற கேள்வி முன்வைக்கப்பட்டதற்கு 1ம் மனுதாரர் அதை மறுத்துள்ளார். ஆனால் 1ம் மனுதாரர் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

5.4. 1ம் மனுதாரர் தரப்பில் சேசு என்ற மூன்றாவது நபர் விபத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 1ம் மனுதாரர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளதுபோல் விபத்திற்கு காரணம் அரசு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:43:58 +0530

பேருந்தின் ஓட்டுநர் என சாட்சியம் அளித்துள்ளார். விபத்தை ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சேசு பார்க்கவில்லை என்றும் விபத்தில் இறந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்தான் சாலை விதிகளை பின்பற்றாமல், பேருந்தின் மீது மோதிவிட்டார் என கேட்கப்பட்ட கேள்விக்கு சரியல்ல என மறுத்துள்ளார்.

5.5. எதிர்மனுதாரர் தரப்பில் பேருந்தின் ஓட்டுநர் முருகேசன் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை அனுசரித்து தான் கவனமாக வாகனத்தை ஓட்டிச்சென்றபோது மணக்குடி சுனாமி காலனி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றி இறக்கிக் கொண்டு சென்றதாகவும், முன்னால் சென்று கொண்டிருந்த கதிர் அறுவடை செய்யும் இயந்திரம் நிறுத்தப்பட்டிருந்ததை கண்டவுடன் இருவழிச்சாலை என்பதால் சாலையில் வாகனங்கள் ஏதும் வருகிறதா என்று கவனித்து பின்பு பேருந்தை வலதுபுறமாக இயக்க முற்படும்போது எதிரே TN 69 AY 1791 என்ற இருசக்கர வாகன ஓட்டி சுனாமி மீனவர் குடியிருப்பு காலணி குறுக்கு சாலையிலிருந்து இறந்துபோன நபர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், சாலைவிதிகளை பின்பற்றாமலும், தலைக்கவசம் அணியாமலும் வருவதை அறிந்தவுடன் பிரேக் பிடித்து பேருந்தை நிறுத்தி விட்ட போதிலும் இருசக்கர வாகன ஓட்டியான இறந்த நபர் வேகத்தை கட்டுப்படுத்த இயலாமல் நிறுத்தியிருந்த பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று கூறியுள்ளார். ஆனால் அவர் சாட்சியத்தை உறுதிப்படுத்தும்விதமாக தனிநபர்கள் யாரும் விசாரிக்கப் படவில்லை.

5.6. எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த நபரான இனிகோ குறுக்குச் சாலையிலிருந்து வந்தார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரருக்கு உள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள பேருந்து ஓட்டுநர் முன்னால் சென்று கொண்டிருந்த

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:44:04 +0530

வாகனத்தை முந்த முற்படும்போது விபத்து ஏற்பட்டது என கூறியதிலிருந்து விபத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவன பேருந்து ஓட்டுநரே காரணம் என்ற முடிவுக்கு வருவதில் இத்தீர்ப்பாயத்திற்கு எவ்வித தயக்கமோ, இடர்ப்பாடோ எழவில்லை. எனவே விபத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

6) **யார் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள்:**

விபத்திற்கு எதிர்மனுதாரர் போக்குவரத்து நிறுவன பேருந்தின் ஓட்டுநர் காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்துள்ளது. எனவே எதிர்மனுதாரர் போக்குவரத்து நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

7) **மனுதாரர்களுக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கத்தக்கது :**

மனுதாரர்கள் தரப்பில் இறந்த இனிகோவின் வயது 23 என மனுவில் குறிப்பிட்டுள்ளனர். இறந்த நபரின் வயதை உறுதிப்படுத்தும்விதமாக தொழிலாளர் நலத்துறையில் வழங்கப்பட்ட அடையாள அட்டை ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.4 ஐ பரிசீலிக்கையில் இறந்த நபருடைய பிறந்த தேதி 11.08.2000 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, விபத்து சமயத்தில் இறந்த இனிகோவின் வயது 23 என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

8) மனுதாரர்கள் தரப்பில் இறந்த இனிகோ கடல் தொழில் செய்து வந்ததாகவும், அதற்கு ஆதரவாக தொழிலாளர் நலத்துறையில் வழங்கப்பட்ட அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தங்கள் மனுவில் இறந்த இனிகோ மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்ததாக தெரிவித்துள்ளனர். அதை நிரூபிக்க எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இறந்த நபரின்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.04.20 18:44:12 +0530

வயது மற்றும் அவரது தொழிலை கருத்தில் கொண்டு இத்தீர்ப்பாயம் பரிசீலிக்கையில் இறந்த நபர் மாதம் ரூ.18,000/– சம்பாதித்திருக்க வாய்ப்புள்ளது. எனவே இறந்த நபரின் மாத வருமானம் தோராயமாக ரூ.18,000/– என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**9)** இறந்துபோன இனிகோவின் வயது 23 என்பதையும் அவரது மாத வருமானம் ரூ.18,000/– என நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டும், **நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி எதிர் பிரணாய் சேத்தி (2017 (2) TNMAC 609) (SC)** என்ற வழக்கில் வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் இனிகோவின் எதிர்கால ஊதியத்தை நிர்ணயம் செய்ய 40% கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் ரூ.18000 + 7200 = ரூ.25,200/–ஐ இனிகோவின் மாத வருமானமாக இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

**10) சரளா வர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேசன் (2009 (2) TNMAC 1) (SCC)** என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் இனிகோ இறக்கும்போது 23 வயதுடையவர் என்பதாலும் அவர் திருமணம் ஆகாதவர் என்பதாலும் அவருடைய வருமானத்தில் அவரது சொந்த செலவிற்காக 1/2 பாகம் எடுத்தது போக மீதி 1/2 பாகத்தை தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று கருதி அதன் அடிப்படையில் ரூ.25,200 – ரூ.12,600 = ரூ.12,600/–ஐ இனிகோ தனது குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று தீர்மானிக்கப்படுகிறது. சரளா வர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இனிகோவின் வயது 23 என்பதை கருத்தில் கொண்டு 18 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில் கொண்டு, வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது. அந்த அடிப்படையில் ரூ.12,600 x 12 x 18 = ரூ.27,21,600/– வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:44:18 +0530

**11)** பிரணாய் சேத்தி வழக்கில், சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் போன்ற வழக்கமான தலைப்புகளை ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 10% வீதத்தில் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இவ்வழக்கு விபத்து 2024 ஆம் ஆண்டு நடந்துள்ளது. எனவே, சொத்து இழப்பு, அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்பு மற்றும் இறுதிச்சடங்கு செலவுகள் என்ற தலைப்பின் கீழ் அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றுக்கான இழப்புக்கு ரூ.44,000/- ஆகவும், இறுதிச்சடங்கு செலவுகள் மற்றும் உடைமை இழப்புக்கு தலா ரூ.16,500/- ஆகவும் இழப்பீடு மதிப்பிடப்பட்டுள்ளது.

**12)** மேற்படி இழப்பீட்டுத்தொகை மனுதாரர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் கீழ்க்கண்டவாறு இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

| | |
|---|---|
| வருமான இழப்பு | ரூ. 27,21,600 |
| 1 முதல் 5 மனுதாரர்களுக்கு அன்பு மற்றும் பாசம் இழப்பு | ரூ. 44,000 |
| ஈமக்கிரியை செலவு | ரூ. 16,500 |
| உடைமைகள் இழப்பு | ரூ. 16,500 |
| மொத்தம் | ரூ. 27,98,600/- |

மேற்படி 1 முதல் 5 மனுதாரர்களுக்கு **ரூ.27,98,600/-** மட்டும் ஒட்டு மொத்த நியாயமான இழப்பீடாக கிடைக்கத்தக்கது என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:44:28 +0530

**இறுதியாக,**

1. இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. 1 முதல் 5 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக **ரூ.27,98,600/-**ம், அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை வருடத்திற்கு 7.5% வட்டியுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மெய்நிகர் கணக்கு (Virtual Account) எண். ADJRMD1762024 (IFSC.No.SBIN0004266)-ல் வைப்பீடு செய்ய வேண்டும் என உத்தரவிடுகிறது. (Excluding default period if any)

3. மேற்படி இழப்பீட்டுத்தொகையில் 1, 2 மனுதாரர்களுக்கு தலா **ரூ.9,79,510/-**ம், 3 முதல் 5 மனுதாரர்களுக்கு தலா **ரூ.2,79,860/-**ம் கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்து உத்தரவிடுகிறது.

4. 1 முதல் 5 மனுதாரர்கள் அவர்களுக்குரிய இழப்பீட்டுத்தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடுகிறது.

5. மனுதாரர்கள் செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக இழப்பீடு தொகைக்குரிய மீதமுள்ள நீதிமன்றக் கட்டணத்தை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக் கட்டணம் முழுவதையும் செலுத்தும் தேதிவரை இழப்பீட்டு தொகைக்கு மனுதாரர்கள் வட்டி பெறத்தக்கவர்கள் அல்ல என்றும் உத்தரவிடுகிறது.

6. வழக்குரைஞர் ஊதியம் **ரூ.47,486/-** என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

**மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகைப்பட்டியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. | 27358 | 50 | |
| வக்காலத்து செலவு | ரூ. | 10 | 00 | |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. | 47486 | 00 | |
| மொத்தம் | ரூ. | 74854 | 50 | முழுமையாக ரூ.74,855/- |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:44:35 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பின்னர் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் என்னால் திறந்த இத்தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.04.20 18:44:50 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**

ம.சா.1 – திரு. அருளாந்து
ம.சா.2 – திரு. சேசு

**மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | இறப்புச் சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.3 | வாரிசு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | இறந்த நபரின் தொழிலாளர் நலத்துறையின் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.5 | மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை – 5 எண்ணம் | நகல் |
| ம.சா.ஆ.6 | பிரேதப் பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :**
எ.ம.சா.1 – திரு. முருகேசன்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.04.20 18:44:57 +0530

**<u>எதிர்மனுதாரர் தரப்பு ஆவணம் :</u>**

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.04.20 18:45:03 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**